[1993 ஏப்ரல் 8]

393—

கள்ளக்குறிச்சி நகருக்குப் பாதாள சாக்கடைத் திட்டம்.

*10565—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி நகருக்குப் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தென்னாற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது, கள்ளக்குறிச்சி வருவாய்க் கோட்டமாக நிலை உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்த நகரம் ஒரு நகராட்சிக்கு சமமாக வளர்ந்து வந்துள்ளது. அங்கே 75,000 மக்கள் தொகை இருக்கிறது. இதுநாள் வரை அங்கே பாதாள சாக்கடைத் திட்டம் வரவில்லை. மக்கள் தொகை அதிகமாக வளருவதைக் கணக்கில் கொண்டு. எதிர்காலத்திலாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டம் கீழ்க்கண்ட வரைமுறைகளுக்குட்பட்ட நகரங்களுக்கு மட்டும் செயலாக்கப்படுகின்றது:

(1) மாவட்டத்தின் தலைநகராக இருத்தல் வேண்டும்.

(2) சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்.

(3) மக்கள் தொகை ஒரு லட்சத்திற்கு மேலுள்ள நகரமாக இருக்கவேண்டும்.

இவைகளைக் கணக்கில் கொண்டு பார்த்தால் கள்ளக்குறிச்சியில் மக்கள் தொகை 21,817 தான் இருக்கிறது. ஆகவே இத்திட்டம் அந்தப் பேரூராட்சியில் இப்போது எடுத்துக் கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நகரத்தில் இந்தத் திட்டம் செயல்படாத காரணத்தினால், ஆங்காங்கே தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கு நோய் ஏற்படுகிற அவலநிலை ஏற்படுகிறது. ஆகவே எதிர்காலத்திலாவது இதற்கு சிறப்பு முன்னுரிமை கொடுத்து இந்தத் திட்டத்தை அங்கே செயலாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:வினா எண். 293, திரு நா. சா. பழனிசாமி; மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

293—

நிலவள வங்கிக் கடன், மின்கட்டணத்தை விவசாயிகளிடமிருந்து வசூலித்தல்.

*11198—திரு. நா.சா. பழனிசாமி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலவரி வசூல் சட்டத்தைப் பயன்படுத்தி கூட்டுறவு நிலவள வங்கி கடன்களையும், மின் கட்டண பாக்கிகளையும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கும் நேரடி நடவடிக்கையை அரசு கைவிட்டு சிவில் நீதிமன்றங்கள் மூலம் வசூலிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை.